பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 04 2024 **MONDAY** 7 15 **PM**

வணக்கம் - ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியில் ரிசர்வ் வங்கி முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 21 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.

4. கோடை வெயிலின் தாக்கம் அடுத்த 3 மாதங்களுக்கு வெகுவாக அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

5. ஸ்லோவேனியா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Vikas Thakkar – Manush Shah** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<<

நாட்டின் வளர்ச்சியில் ரிசர்வ் வங்கி முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ரிசர்வ் வங்கியின் 90ஆம் ஆண்டு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் ரிசர்வ் வங்கி ஆற்றிய பணிகள், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கான தீர்மானங்கள் அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

வங்கி துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளையும் பிரதமர் பட்டியலிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ரிசர்வ் வங்கியின் 90 ஆண்டுகால சேவையை குறிக்கும் வகையிலான நினைவு நாணயத்தையும் திரு. நரேந்திர மோடி வெளியிட்டார்.

>>>>>><<<<<<

பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 21 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 32 சதவீதம் அதிகமாகும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த நிதியாண்டில், 20 லட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவை எட்டியதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் இந்த வரி வருவாய், ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<<

மக்களவைத் தேர்தலுக்கான முதற்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வாக்குச்சாவடி சீட்டு வழங்குதல் உள்ளிட்ட பணிகள் தொடங்கியுள்ளன.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், வீடு வீடாக சென்று வாக்குச்சாவடி சீட்டுகளை வழங்கி வருகின்றனர்.

தமிழகத்தில் வாக்குச்சாவடி சீட்டுகளோடு, வாக்காளர் கையேடும் வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி. சாந்தி இப்பணிகளை தொடங்கி வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி – 50 செகண்ட்ஸ்)

இந்த தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பறக்கும் படையினர் பறிமுதல் செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் 109 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, உரியவர்களிடம் வழங்கப்பட்டதாக ஆட்சியர் திரு. ராஜகோபால் சுன்கரா தெரிவித்தார்.

(சவுண்ட்பைட் - ஆட்சியர் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ராஜஸ்தானின் ஜோத்பூரில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, கொள்கை அடிப்படையில் இணைந்ததல்ல என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 400க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிபெறும் என்றும் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தொழிலதிபர்களுக்கு ஆதரவாக பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, விவசாயிகளின் கடனை பிஜேபி தலைமையிலான அரசு ரத்து செய்யவில்லை என்று கூறியுள்ளது.

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சியிலும் மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்று காங்கிரஸ் குறை கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

புதிய தொழில்நுட்பங்களால் ஏற்படும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது என்று மத்திய உள்துறைச் செயலர் திரு. அஜய் பல்லா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், சிவில் விமான போக்குவரத்து சேவை அமைப்பின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

செயற்கை நுண்ணறிவு, ட்ரோன் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அவர் கூறினார்.

சிவில் விமான போக்குவரத்துத்துறை அதிவிரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் திரு. அஜய் பல்லா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் முதன்மை தலைமை இயக்குநராக திருமதி. **Sheyphali Sharan** இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பதவியை வகித்து வந்த திரு. மனீஷ் தேசாய் நேற்று ஓய்வு பெற்றார்.

>>>>>><<<<<<

கோடை வெயிலின் தாக்கம் அடுத்த 3 மாதங்களுக்கு வெகுவாக அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

கோடை வெயிலின் தாக்கம் தொடர்பாக இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வெயிலின் பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த சில ஆண்டுகளாக உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை திரு. கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் திரு. கமல் கிஷோர் பேசுகையில், இதுதொடர்பாக மாநில அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

கோடை வெயிலின் பாதிப்புகளை குறைப்பதில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. கமல் கிஷோர் தெரிவித்தார்.

இதற்கிடையே, தென் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 39 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Vikas Thakkar – Manush Shah** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

உலக கோப்பை பளுதூக்கும் சாம்பியன் போட்டி தாய்லாந்தில் தொடங்கியது.

இந்தியாவின் **Meerabai Chanu** மற்றும் **Bindyarani Devi** இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>><<<<<<<**

**Grenke** செஸ் ஓப்பன் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Arjun Erigaisi** ஏழு புள்ளிகளை பெற்றுள்ளார்.

**>>>>>><<<<<<<**

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரிவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா முதலிடத்தை பிடித்துள்ளார்.

**>>>>>>END<<<<<<<**